**செய்தி வெளியீடு எண்: 837** **நாள்: 26.11.2019**

## <u>தொழிலாளர் துறையினரால் வழங்கப்படும் உரிமங்களை ஆன்லைன் மூலம் புதுப்பிக்க அழைப்பு</u>

தொழிலாளர் துறையின் மூலம் வழங்கப்படும் உரிமங்கள் எளிமையாக்கப்பட்டு அவைகள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கும் முறை கடந்த ஜீலை மாதத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்துறையின் மூலம் வணிகர்கள், கடைகள் மற்றும் நிறுவன உரிமையாளர்கள், உணவு நிறுவனத்தினர், ஒப்பந்ததாரர்கள், பிற மாநில பணியாளர்களை தொழிலில் பயன்படுத்தும் ஒப்பந்ததாரர்கள், மற்றும் எடையளவுகள் தயாரிப்பாளர்கள், பழுதுபார்ப்பவர்கள், விற்பனையாளர்கள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் உரிமங்களை புதுப்பிக்க வேண்டிய கடமையுள்ளதால் தொழிலாளர் துறையில் தற்பொழுது ஆன்லைன் மூலம் எளிமையான முறையில் புதுப்பித்தலுக்கு மென் பொருள் உருவாக்கப்பட்டு தொழிலாளர் துறையின் வெப்போர்ட்டல் **tn.labour.gov.in** என்ற இனைய தளத்தில் உரிமங்கள் புதுப்பித்தல் என்ற பகுதியினை தேர்ந்தெடுத்து தேவையான விபரங்களை பூர்த்தி செய்து ஆன்லைன் மூலமாக உரிய தொகையினை செலுத்தி உரிமங்களை புதுப்பிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைத்து வணிகர்கள், உணவு நிறுவனம், மோட்டார் போக்குவரத்து நிறுவனம், ஒப்பந்ததாரர்கள் இவ்வசதியினை அவரவர் அலுவலகத்திலிருந்தே உரிமங்களை புதுப்பிக்க ஏற்பாடு செய்துள்ள இவ்வசதியினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**